## சுருக்கம்

பணியமைப்பு – மத்திய அரசு சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டம் – 123 சமுதாய அமைப்பாளர் (Community Organiser) பணியிடங்களை ரூ.3200–85–4000 என்ற விகிதத்தில் வேலை வாய்ப்பகம் மூலம் நிரப்பி கொள்ள அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை(நிலை) எண்.264** **நாள் 31.12.2008.**

படிக்க –

1. அரசாணை (நிலை) எண்.240, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.09.1992.
2. அரசாணை (நிலை) எண்.238, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14.12.1998.
3. அரசாணை (நிலை) எண்.83, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 08.06.2005.
4. அரசாணை (நிலை) எண்.128, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 30.10.2006.

மீண்டும் படிக்க –

5. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண்.7848/2006/UPA–5, நாள் 20.12.06, 26.05.07, 14.07.07, 15.11.07, 25.02.07, 23.06.08 மற்றும் 13.10.2008.

-----

ஆணை –

மேலே முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் மத்திய அரசின் சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டத்தின் (Swarana Jayanthi Rozgar Yojana -SJSRY) வழிகாட்டு நெறிமுறைகளின்படி, நகர்ப்புரங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றவும், திட்டத்தின் முழு பயன்கள் ஏழைகளுக்கு சென்றடைய ஒவ்வொரு 2000 குடும்பங்களுக்கு ஒரு சமுதாய அமைப்பாளர் நியமிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சென்னை மாநகராட்சி நீங்கலாக மற்ற அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 275 சமுதாய அமைப்பாளர் பணியிடங்களும், மூன்றாம் நிலை நகராட்சிகளில் 18 சமுதாய அமைப்பாளர் பணியிடங்களும் ஆக மொத்தம் 293 சமுதாய அமைப்பாளர் பணியிடங்களை தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளில் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 170 சமுதாய அமைப்பாளர்களுக்கு, இளநிலை உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ.3200–85–4000 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் (Time Scale of Pay) 01.09.2006 முதல் ஊதியம் வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

3. ஐந்தாவதாக படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதங்களில், மத்திய அரசின் சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டத்தினை செயல்படுத்த மேலே பத்தி ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள 293 சமுதாய அமைப்பாளர் பணியிடங்களில் மீதமுள்ள 123 சமுதாய அமைப்பாளர் பணியிடங்கள் உள்ளது. மத்திய அரசின் ஸ்வர்ண ஜெயந்தி திட்டத்திற்கு 2008–09 நிதியாண்டில் ரூ.2,006 கோடி மத்திய அரசு முதல் தவணை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதால், இதனை உரிய முறையில் செயல்படுத்த 123 சமுதாய அமைப்பாளர் காலிப்பணியிடங்களை நிரப்புவது அவசியம். காலிப் பணியிடங்களால் சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டத்தை செயல்படுத்துவதில் இடையூறுகள் ஏற்படுகின்றன. மேலும், அரசாணை(நிலை)எண்.21, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 23.02.2006–ல் தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த பணியாளர்களை ஏற்றமுறை ஊதியத்தில் கொண்டு வர அரசு ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையில், தொகுப்பூதியத்தில் பணியாளர்களை நியமனம் செய்யக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், சமுதாய அமைப்பாளர் பணியிடங்களை ஏற்றமுறை ஊதிய விகிதத்தில் நியமனம் செய்வது அவசியம் என தெரிவித்து காலியாக உள்ள 123 சமுதாய அமைப்பாளர் பணியிடங்களை ரூ.3200–85–4000 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் வேலை வாய்ப்பகம் மூலம் நிரப்பிக் கொள்ள அரசின் அனுமதியினை கோரியுள்ளார்.

4. அரசின் பரிசீலனைக்குப்பின், நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை ஏற்று, மத்திய அரசின் சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த, ஏற்கனவே உள்ள 170 சமுதாய அமைப்பாளர்கள் (Community Organisers) மற்றும் தற்போது அனுமதியளிக்கப்பட்டுள்ள 123 சமுதாய அமைப்பாளர் பணியிடங்களுக்கான சம்பள கணக்கினை மத்திய அரசின் சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கர் யோஜனா திட்டத்தின்கீழ் மேற்கொள்ளுதல் வேண்டும் மற்றும் இத்திட்டம் முடிவுறும்போது, இப்பணியிடங்களை கைவிடப்பட வேண்டும் (disbanded) என்ற நிபந்தனைகளுடன் தற்போது காலியாக உள்ள 123 சமுதாய அமைப்பாளர் (Community Organiser) பணியிடங்களை ரூ.3200–85–4000 என்ற ஊதிய விகிதத்தில் (Time Scale of Pay) வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் நிரப்பிக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.3770/FS/P/2008, நாள் 24.12.2008–ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக).
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 005.
கருவூல கணக்கு ஆணையர், சென்னனை – 600 005.
நகல் – மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
செயலாளரின் தனி செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.நு.மு.2)துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/1/2009

பிரிவு அலுவலர்.